மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 03 திங்கட்கிழமை 09.09.2024 கதிர் 357

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் குழப்பம்

- நினைவுக் கல்லை பலவந்தமாக அகற்றிய பொலிஸார்
- இராணுவமும் குவிக்கப்பட்டமையால் பதற்ற நிலை
- இழுத்து செல்லப்பட்ட 7 பேர் விசாரணையின் பின் விடுதலை






மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப்பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதில் இராணுவத்தால்படுகொலை செய்யப்படவர்கள் என்ற பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இன்று பதிக்கப்பட்டது. இதனைப் பொலிஸார் பலவந்தமாகக் கழற்றி எடுத்ததையடுத்து அங்கு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு மேலதிக பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது. 2➤





## மட்டக்களப்பில் களம் இறங்கினார் தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னுடைய பிரசாரப் பணிகளை இன்று காலை ஆரம்பித்துள்ளார். 2➤

## பொது வேட்பாளர் விடயத்தில் குழப்பம் தமிழரசின் விசேட குழு நாளை கூட்டம்

பொது வேட்பாளர் விவகாரத்தில் உருவாகியுள்ள குழப்பத்தையடுத்து இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுவால் நியமிக்கப்பட்ட விசேட குழு நாளை வவுனியாவில் கூடவுள்ளது. 2➤

## இலங்கையில் உள்ள மீனவரை மீட்க உறுதியான முயற்சிகளை எடுங்கள்

### ஜெய்சங்கரை வலியுறுத்தும் தமிழக முதலமைச்சர்



இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும்அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான துாதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில் “இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த 7 ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும் அவர்களது மூன்று மீன்பிடி விசைப் படகுகளையும் இலங்கை கடற்படையினர் 2➤

## சிவில் சமூகம் இலங்கையில் கண்காணிக்கப்படுகின்றது

### ஜெனிவா முதல்நாள் அமர்வில் பிரித்தானியா

இலங்கையில் சிவில் சமூகம் கண்காணிக்கப்படுகின்றது துன்புறுத்தப்படுகின்றது என ஐ.நா. மனித உரிமை பேரவையில் பிரித்தானிய பிரதிநிதி தெரிவித்துள்ளார். 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தென்பகுதி வேட்பாளர்களுக்கு தமிழர்கள் வாக்களிக்க கூடாது

## பொது வேட்பாளர் அரியநேத்திரன் வேண்டுகோள்

ஜனாதிபதித் தேர்தலில் தென்பகுதி வேட்பாளர்களுக்கு நாம் அளிக்கும் வாக்கு எமது தலையில் மண் அள்ளிப்போடும் செயல் என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இரவு தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று பரவலாகப் பேசப்படுகின்ற மூன்று தென் பகுதி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் நாம் அளிக்கின்ற வாக்கானது எமது தலையில் மண்ணை நாமே அள்ளிக் கொட்டுவதற்குச் சமமாகவே இருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை.

இதில் சஜித் பிரேமதாஸ ஆயிரம் பன்சாலைகளைக் கட்டுவதாகத் தெரிவித்திருக்கின்றார். இந்தநிலையில் யாரோ ஒரு கட்சி கூறுகின்றது என்பதற்காக நீங்கள் அவருக்கு அளிக்கின்ற வாக்கானது பன்சாலைகளுக்கு வைக்கின்ற ஒவ்வொரு கல்லாகத்தான் இருக்கும்.

அதேபோல், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்கானது இருக்கின்ற நிலங்களை இன்னும் இழந்து செல்வதாகவே அமையும். ஒரு கட்டமைப்பாக ஒரு தேசமாக ஓர் இனத்தின் விடுதலைக்காக இருந்த எம்மைச் சிதைத்த பெருமை ரணிலைத்தான் சாரும்.

அதேபோல் அநுரகுமார திஸாநாயக்க எமது இணைந்த வடக்கு - கிழக்கைப் பிரித்தவராக இருக்கின்றார். இவ்வாறானவர்களைத் தென்பகுதியில் இருந்து அழைத்து வந்து மாலை போட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்கின்ற ஒரு வெட்கம் கெட்ட சமூகமாக நாம் மாறி வருகின்றோம்.

ஆகவே, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஊடாக ஒரு செய்தியைச் சொல்வதற்காகவே நான் வந்திருக்கின்றேனே தவிர, ஒரு ஜனாதிபதியாக வருவதற்கு அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அந்தக் கதிரையைத் தட்டிப் பறிப்பதற்காக இல்லை.

ஈழ மண்ணில் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் நாங்களாகவே இருக்கின்றோம் என்ற தகவலை சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் தென்னிலங்கைக்கும், நாட்டில் ஒன்பதாவது ஜனாதிபதியாக வர இருக்கின்றவருக்கும் நாங்கள் கொடுக்க இருக்கின்றோம்.

எங்களுடைய வடக்கு - கிழக்கில் ஓர் இனமாக - ஒரு தேசமாக ஒன்றிணைந்த கட்டமைப்புக்குள் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வைப் பெறுவதற்காக எங்களுடைய இனம் ஒன்றிணைந்து தனது ஆதரவைத் தெரிவிக்கின்றது என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

இந்தப் 13 நாட்களுக்குப் பல போலியான செய்திகள் என்னைப் பற்றி வரலாம். எதிர்வரும் 20ஆம் திகதி கூட அரியநேத்திரன் இவருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார், அவருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற செய்தி கூட சமூக வலைத்தளங்களின் ஊடாக வெளிவரலாம். ஆனால், நான் எந்தவிதமான மாற்றத்துக்கும் உட்படப் போவதில்லை.

ஆகவே, எதிர்வரும் 21ஆம் திகதி நீங்கள் போடுகின்ற புள்ளடியானது எமது இனத்துக்கான புள்ளடி, எமது விடுதலைக்கான புள்ளடி, எமது மண் மீட்புக்கான புள்ளடி என்பதை உணர்ந்து செயற்படுங்கள்." - என்றார்.

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது தாய்ப்பட்டினம் மட்டக்களப்பில் இன்று அரியநேத்திரன் களமிறங்கிய போது பெருந்தொகையான மக்கள் கூடிநின்று அவரை வரவேற்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர், அடுத்த சில தினங்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பரப்புரைகளை முன்னெடுக்கவுள்ளார்.

## சத்துருக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்கு உட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும், ஒட்டுக்குழுவினராலும் இந்தப் படுகொலை அரங்கேற்றப்பட்டிருந்தது. இந்தப் படுகொலையின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். இந்த நினைவேந்தலைச் செய்வதற்காகப் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இன்று ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் மேற்படி அராஜகச் செயலில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் ஜீப் வாகனத்தில் இழுத்து ஏற்றப்பட்ட சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 7 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் அவர்களைப் பொலிஸார் அங்கு இறக்கி விட்டனர்.

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் பா.சத்தியலிங்கம் ஆகியோர் கூடி கலந்துரையாடவுள்ளனர். இந்த சந்திப்பு தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் பா.சத்தியலிங்கத்தின் வவுனியா அலுவலகத்தில் கூடவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து அறிக்கை வெளியிடும் நோக்கில் இந்த சிறப்பு குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, நாளை கூடி ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதில் இலங்கை தமிழரசு கட்சிக்குள் கடும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி வவுனியாவில் கூடிய தமிழரசு கட்சியின் மத்திய குழு, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தை ஆதரிப்பதாக கூறியிருந்தது. தமிழரசு கட்சியின் சி.சிறீதரன் உள்ளிட்ட பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவு வழங்க முடிவுசெய்துள்ளனர். இந்நிலையிலேயே, ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குது என்பது தொடர்பில் தமிழரசு கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த குழப்பங்களை தணிக்கும் நோக்கில் நாளை விசேட குழு கூடி இறுதி முடிவை எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, நாளை எடுக்கப்படும் தீர்மானம், மத்திய குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

57 ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகியது. இன்றைய அமர்வில் பிரித்தானிய பிரதிநிதி இதனை தெரிவித்துள்ளார்.

சமூகங்களிற்கு இடையில் பதற்றத்தை அதிகரிக்கும் நிலத்தகராறு குறித்து சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானிய பிரதிநிதி, அதற்கு தீர்வை காணவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இதேவேளை இலங்கை பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என கனடா வேண்டுகோள் விடுத்துள்ளது. கண்மூடித்தனமான கைதுகளிற்கு வழிவகுக்கும் ,சுதந்திரத்தினை கட்டுப்படுத்தும் புதிய சட்டங்கள் குறித்து கரிசனை கொண்டுள்ளதாக கனடா தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப காணப்படவேண்டும் என கனடா வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறைபிடித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் மட்டும் 350 மீனவர்கள் மற்றும் 49 மீன்பிடிப் படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் இது மிக அதிகமானது. மேலும் இலங்கை நீதிமன்றங்கள் மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்களை விதித்து வருகின்றன.

இலங்கை அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழக மீனவர்கள் அங்கு சிறையில் இருக்கும் காலத்தை நீட்டிக்க வழி செய்வதோடு ஏற்கெனவே துயரத்தில் உள்ள மீனவக் குடும்பங்களை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி அவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பிற்கும் வழி வகுக்கும்.

எனவே இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்திடவும் கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தைக் விரைந்து நடத்திடவும் வேண்டும். இதில் அமைச்சர் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்



4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ‘தோட்டத்தில் வதிவாளர்’ என்பதை உறுதி செய்யும் அதிகாரத்தை வழங்க முடியாது

## தேர்தல் ஆணைக்குழு முடிக்கு எதிர்ப்பு தெரிவித்த திலகர்

வாக்காளர்ஒருவருக்கு அடையாள அட்டை இல்லாத விடுத்து அவரது வதிவிடத்தை உறுதி செய்து தற்காலிக அடையாள அட்டை உதவி தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்தலுடன் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவினால் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், குறித்த பிரஜை அந்த வீட்டில் வாக்காளராக பதிவு செய்யப்பட்டு இருக்கிறார் என்பதை உறுதி செய்யும் அதிகாரம் தோட்ட அதிகாரிக்கும் உண்டு என தேர்தல்கள் ஆணைக்குழு இன்றைய கலந்துரையாடல் கூட்டத்திலே தெரிவித்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்த சுயாதீன மலையக ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜா குறித்த குடியிருப்பில் வாழும் குறித்த பிரஜை அந்த முகவரியில் வாழ்கிறார் என்பதை உறுதி செய்யும் பொறுப்பு கிராம அதிகாரிக்கே உண்டு என்று வாதிட்டார்..



காலம் காலமாக தோட்ட அதிகாரிகளினால் இதனை உறுதிப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டு வருவதனால் தான் அவர்கள் அடையாள அட்டையைப் பெற முடியாதுள்ளனர். எனவே தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவரின் தொழில் சார்ந்த அதிகாரம் தோட்ட அதிகாரிக்கு உண்டே தவிர, தோட்டத்தில் வதியும் அதிகாரியை தவிர அந்த தோட்டத்தில் வதியும் தொழிலாளியோ அல்லது தொழிலாளி அல்லாத ஒருவரோ அவர் வாக்காளராக இருந்தால் அதனை உறுதி செய்ய வேண்டியது கிராம அதிகாரியே அன்றி தோட்ட அதிகாரி அல்ல” என்றும் அவர் தெரிவித்தார்.

‘ஏனெனில் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதவர்களும் தோட்டத்தில் வசிக்கிறார்கள்” என்றும் சுட்டிக்காட்டிய திலகராஜா, தோட்டத் தொழிலாளர்களாக இருந்தாலும் கூட அவரது வேலை விடயம் சம்பந்தமாக தோட்ட அதிகாரி ஏதேனும் உறுதிப்படுத்தல் செய்யலாமே தவிர இவர் இந்த தோட்டத்தின்வதிவாளர்என்பதையோ வாக்காளர் என்பதையோ உறுதி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பு கிராம அதிகாரிக்கே உண்டு என்கின்ற நிலையில் , அந்த வதிவாளரை உறுதி செய்யும் பணியை கிராம சேவை அதிகாரிகள் வசமே ஒப்படைக்குமாறும் தோட்ட அதிகாரிகளுக்கு அதனை வழங்காது இருக்குமாறு சுயாதீன தேர்தல் ஆணைக்குழு விடம் கோரியதுடன் தேர்தல் ஆணைக்குழு இந்த அதிகாரத்தை தோட்ட அதிகாரிக்கு கொடுப்பதை தான் எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுயாதீன வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சுயாதீனக் ஆணைக்குழு தாங்கள் கலந்து பேசி இதற்கு உரிய தீர்வினை பெற்று தருவதாக தன்னிடம் பகிரங்கமாக உறுதி அளித்ததாகவும்



## 2046 லிட்டர் கோடா அழிப்பு

தர்மபுரம் போலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை இன்றைய தினம் தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சுற்றிவலைப்பை மேற்கொண்ட பொழுது கசிப்பு உற்பத்தியில் மேற்கொண்ட சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அதனை அடுத்து அப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட கோடா 2040 லிட்டரையும் பொலிஸார் அப்பகுதியில் அழித்துள்ளனர். அத்துடன் இச்சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாக தர்மபுரி பொறுப்பு அதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (113)

# கடவுச் சீட்டை பெற 15 நாட்களுக்கு மேலாக காத்திருப்போரின் அவலம்

## இரவு பகலாக குடும்பத்துடன் காத்திருப்போரின் நிலை








கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக வவுனியா குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திற்கு முன் 15 நாட்களுக்கு மேலாக இரவு பகலாக குழந்தைகளுடன் பொது மக்கள் காத்திருக்கும் பெரும் இன்றும் அவலம் தொடர்கிறது என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கழிவு வாய்க்காலின் மிக மோசமான துர்நாற்றம், நுளம்பு கடி தொல்லை, பாம்புகளின் நடமாட்டம் என பெரும் அவலத்திற்கு முகம் கொடுத்து வாரக்கணக்கில் இரவு பகலாக படுக்கை விரிப்புக்களை விரித்து படுத்து உறங்குவதாகவும், தெரிவித்துள்ள பொது மக்கள். இந்த பெரும் அவலத்திற்கு விரைவில் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 60 கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன நிலையில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் இவ்வாறு15 நாட்களுக்கு மேலாக வரிசையில் நிற்கின்றனர். (316)

# நிறைவேற்றக் கூடியவையா இவர்களுநைய வாக்குறுதிகள்?



எதிர்வரும் 2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து முக்கிய வேட்பாளர்களும் தேர்தல் வாக்குறுதிகளில் வரிச்சுமையைக் குறைப்பதாக உறுதி அளித்திருக்கின்றனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையை வளமான நாடாக மாற்றும் வகையில் அடுத்த 5 வருடங்களில் நிறைவேற்றப் போவதாகக் கூறும் வாக்குறுதிகள் பற்றிய தகவல்கள் அவற்றில் இடம்பெற்றுள்ளன.

ஆனால், தங்கள் வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகளைச் செயல்படுத்த எவ்வளவு பணம் செலவாகும், அதற்கான பணத்தை எவ்வாறு ஈட்டுவது என்று ஜனாதிபதி வேட்பாளர்கள் குறிப்பிடவில்லை. ஆனால், வரி திருத்தங்கள், அரசுத் துறைகளின் செயல்திறன் மற்றும் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் வருமானத்தை ஈட்ட அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஆனால், இலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான பணத்தை எப்படி ஈட்டுவார்கள்?

### பொருளாதார நிலை

கடுமையான கடன் நெருக்கடி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்புப் பற்றாக்குறையை எதிர்கொண்ட இலங்கை, அதிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்பட்ட கடன் திட்டத்தின் படி, அரசு வருமானத்தை அதிகரிப்பதற்காகத் தற்போதைய இலங்கை அரசாங்கம், மாதம் 1 லட்சம் ஷரூபாய்க்கு மேல் வருமானம் பெறும் தொழிலாளர்களிடமிருந்து 8மூ–36மூ'யுலுநு வரி ('யல யுள லுழர நுயசெ வரி) அறிமுகப்படுத்தி ஏயுவு சதவீதத்தை அதிகரித்து வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது அமெரிக்க டாலர் ஒன்றின் பெறுமதி சுமார் 200 இலங்கை ஷரூபாயாக இருந்த நிலையில், தற்போது 300 ஷரூபாயாக உள்ளது. கடந்த ஆண்டு 370 ஷரூபாயாக இருந்தது.

2019–ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது 120 ஷரூபாயாக இருந்த ஒரு லிட்டர் பெட்ரோல் தற்போது 300 ரூபாயைத் தாண்டியுள்ளது.

2022–ஆம் ஆண்டின் துவக்கத்தில் எதிர்கொண்ட கடுமையான அந்நியச்செலாவணி நெருக்கடியின் காரணமாக இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டன. வாகனங்களின் இறக்குமதி மேலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பல தொழில் வல்லுநர்கள் அதிக வரி காரணமாக சிரமப்படுகின்றனர். சிலர் வேறு நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர்.

2019–ஆம் ஆண்டின் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், அதன் பிறகான கோவிட் தொற்றுநோய், ஆகியவற்றுக்குப் பிறகு பின்னடைவைச் சந்தித்த இலங்கை சுற்றுலாத் துறை படிப்படியாக மீண்டு வருகிறது.

இவ்வாறான பின்னணியில் புதிதாக தெரிவு செய்யப்படவுள்ள ஜனாதிபதி, தனது தேர்தல் வாக்குறுதிகளையும் கொள்கைகளையும் செயல்படுத்தி, நாட்டில் போதுமான வருமானத்தைப் பெற்று நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது.

இந்நிலையில், நாட்டின் வருமானத்தை அதிகரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் முன்வைக்கும் திட்டங்கள் என்ன?

### ரணிலின் "இலலும் சிறீலங்கா"

தற்போதைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'புலுவன் ஸ்ரீலங்கா' என்ற தனது தேர்தல் அறிக்கையில் புதிய வணிகப் பொருளாதார முறையை முன்மொழிந்துள்ளார். இந்த வணிகப் பொருளாதார அமைப்பின் கீழ், பல்வேறு துறைகளை மேம்படுத்தி வருமானம் ஈட்ட முன்மொழியப்பட்டுள்ளது.

0 அடுத்த 5 ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை 25 லட்சத்தில் இருந்து 50 லட்சமாக அதிகரித்தல்

0 தேசிய செல்வ நிதியை நிறுவுதல்

0 1,000 ஏக்கரில் புதிய முதலீட்டு மண்டலங்களை நிறுவுதல்

மீன் ஏற்றுமதி வருமானத்தை இரட்டிப்பாக்கி 30 கோடி டாலர் ஆக்குவது

வருடாந்திரப் பால் உற்பத்தியை 38 கோடி லிட்டரிலிருந்து 82 கோடி லிட்டராக உயர்த்துதல்

0 காலநிலை மாற்ற நிதியை நிறுவுதல்

0 கார்பன் வரியை அறிமுகம் செய்தல்

### சஜித்தின் 'அனைவருக்கும் வெற்றி':

எதிர்க்கட்சித் தலைவரும் சமகி ஜன பலேவேக கூட்டணியின் சஜித் பிரேமதாச முன்வைத்திருக்கும் 'சமத ஜயக்' என்ற தேர்தல் அறிக்கையில் சமூகச் சந்தைப் பொருளாதாரத்தின் மாதிரி முன்மொழியப்பட்டுள்ளது.

0 அரசின் வருவாயை அதிகரிப்பதற்கு வரியை உயர்த்துவது மட்டும் தீர்வாகாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

0 வருவாயை அதிகரிக்கவும், செலவுகளைக் குறைக்கவும், மாசுபாட்டைக் குறைக்கவும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்

0 அனைத்து மாவட்டங்களிலும் 25 புதிய தொழில் மண்டலங்களை நிறுவுதல்

0 இலங்கையின் சுற்றுலாத் துறையை நாட்டுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் முன்னணித் துறையாக மாற்றுதல்

0 அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிக்க முக்கிய சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்

0 5 ஆண்டுகளில் 10 லட்சம் வீடுகளுக்கு சூரிய ஆற்றல் அளித்தல்

நியாயமற்ற வரி கட்டமைப்புகளைத் திருத்துதல்

0 காரணி சந்தை சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல்

### அனுரவின் 'செழிப்பான நாடு, அழகான வாழ்க்கை'

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் 'செழிப்பான நாடு, அழகான வாழ்க்கை' என்ற தேர்தல் அறிக்கையில் உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

0 வரி விகிதங்களை நியாயமான முறையில் திருத்துவது, வரி தளத்தை விரிவுபடுத்துதல்

0 தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் சுற்றுலாத் துறை வளர்ச்சி மூலம் அந்நியச் செலாவணி கையிருப்பை மேம்படுத்துதல்

0 ஒரு ஏக்கர் விவசாய நிலம் மூலம் 30 லட்சம் ஷரூபாய் வருமானம் ஈட்டுதல்

0 தேசியத் தேயிலை உற்பத்தியை 40 கோடி மெட்ரிக் டன்களுக்கு மேல் உயர்த்துவது

0 ஒரு ஹெக்டேருக்கு 6 மெட்ரிக் டன் அரிசி தயாரித்தல்

0 2028–க்குள் அலங்கார மீன் மற்றும் அலங்கார நீர்வாழ் தாவர ஏற்றுமதி வருமானத்தை 25மூ அதிகரித்தல்

0 2030–க்குள் தகவல் தொழில்நுட்பத் துறையின் ஆண்டு வருவாயை 500 கோடியாக உயர்த்துதல்

### நாமலின் 'உங்களுக்காக ஒரு வளர்ந்த நாடு'

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஸ, 'உங்களுக்காக ஒரு வளர்ந்த நாடு' என்ற தனது தேர்தல் அறிக்கையின் மூலம் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களை முன்வைத்துள்ளார்.

0 சுங்கம், வருமான வரி, மற்றும் கலால் துறையின் குறைபாடுகளை உடனடியாகச் சரிசெய்து, அரசு வருவாயை உருவாக்குதல்

0 அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கான சிறப்பு முதலீட்டு வசதிகளை அறிமுகப்படுத்துதல்

0 அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிக்கச் சிறப்புச் சுற்றுலா ஊக்குவிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்

0 வருமான வரி செலுத்தும் தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், எளிமையான வரி முறையை அறிமுகப்படுத்துதல்

0 அடுத்த தசாப்தத்தில் 1,800 கோடி டாலர் அளவிலான உற்பத்தியை உருவாக்க, விவசாயம், மீன்வளம், விலங்கு மற்றும் வனவியல் தொடர்பான தொழில்களை மேம்படுத்துதல்

0 இரண்டாம் நிலைத் துறை உற்பத்தி மூலம் அடுத்த பத்தாண்டுகளில் 4,500 கோடி டாலர்கள் அளவுக்கான உற்பத்தி மதிப்பைப் பொருளாதாரத்தில் சேர்த்தல்

தகவல் தொழில்நுட்ப மண்டலங்களை நிறுவுதல்

இந்த ஆண்டு இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் தங்களது தேர்தல் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால், இந்த வேட்பாளர்கள் வரி சீர்திருத்தங்கள், வெளிநாட்டு முதலீடுகள், மற்றும் திட்டங்கள் மூலம் நாட்டுக்கு எவ்வளவு வருவாயை எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் குறிப்பிடவில்லை.

**பிபிசி சிங்கள மொழிச் சேவை**

# விருப்பு வாக்குகள் எண்ணப்படும் போது வன்முறைகளைத் தூண்டிவிடத் திட்டம்

## எச்சரிக்கை விடுக்கிறார் விமல் வீரவன்ச

“இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வெளியாவதற்கு முன்னரே நாட்டில் வன்முறை நிலைமைகளை ஏற்படுத்த திட்டமிடுவதாகவும், எவருக்கும் 50 வீத வாக்குகள் கிடைக்காது” என்றும், “இரண்டாவது தெரிவு விருப்பு வாக்குகள் எண்ணப்படும் காலத்தில் இவ்வாறான வன்முறைகள் திட்டமிட்டு பரப்பப்படலாம்” என்றும் தேசிய சுதந்திர முன்னணி தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலில்எந்தவொரு வேட்பாளரும், வெற்றிபெறுவதற்குத்தேவையான 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், இரண்டாவது தெரிவாக விருப்பு வாக்குகள் எண்ணப்படும் நிலை ஏற்படலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் தொலைக்காட்சியில் நடந்த அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட விமல் வீரவன்ச, இவ்வாறு விருப்பத்தெரிவு வாக்குகள்எண்ணப்படும்நிலையில் வன்முறைகளைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுவதற்கு சிலர் திட்டமிட்டுள்ளதாக எச்சரித்தார்.

விமல் வீரவன்ச மேலும் தெரிவிக்கையில், “அமெரிக்கத் தூதுவர் ஜ/லியா சங்கின் பதவிக் காலம் சில மாதங்களுக்கு முன்னர் முடிவடையவுள்ளதாக கூறப்பட்டது. ஆனால் அவர் இன்னும்பதவியில் இருக்கின்றார்” என்றும், “அவருக்கு வழங்கப்பட்ட பணியை இன்னும் அவர் பூர்த்தி செய்யாத காரணத்தினாலேயே



அந்தப் பதவியில் தொடர்கின்றார்” என்றும் தெரிவித்தார். “அவரிடம் “ஏ, பி’ என சில திட்டங்கள் இருக்கின்றன. ஜ/லை 9 இல் நடந்தது திட்டம் ஏ அல்ல. திட்டம் “பி’ யே செயற்படுத்தப்பட்டது” என்றும், “திட்டம் “ஏ’ இப்போது பங்களாதேஷில் நடக்கின்றது. அதாவது அங்கு இடைக்கால ஆட்சியே நடக்கின்றது. இங்கே அவர்களின் “ஏ’ திட்டத்தை அன்று செயற்படுத்த முயன்ற போதும் சபாநாயகர் இணங்கியிருக்கவில்லை” என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

“எவ்வாறாயினும் ஜ/லிய சங் இங்கிருந்து போக முன்னர் அவரின் திட்டம் “ஏ’ யை செயற்படுத்த வேண்டும்என்று நினைக்கின்றனர்” என்று தெரிவித்த விமல் வீரவன்ச, “ரணிலும் சஜித்தும் இணைந்தே இம்முறை தேர்தலில் களமிறங்க எதிர்பார்க்கப்பட்டது. அது முடியாது போயுள்ளது” என்றும், “இந்நிலையில் அமெரிக்காவின் முதல் தெரிவாக இருக்கும் ரணிலை ஜனாதிபதியாக்குவது இலகுவான விடயம் அல்ல. அப்படியென்றால் இதற்கான தீர்வு என்ன? ஒன்று அவரை விடவும் பலமான ஒருவரை கொண்டு வர வேண்டும்” என்றும் அவர் தெரிவித்தார். “அமெரிக்காவின் முதல் தெரிவாக ரணில் இருந்தாலும் இரண்டாவது தெரிவாக ஜே.வி.பியும் உள்ளது. எனினும் அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகி அவர் ஏதாவது வேலையை செய்யும்போது நாட்டுக்குள் எதிர்ப்புகள் உருவாகும்” என்று குறிப்பிட்ட விமல் வீரவன்ச, “ஆனால் ரணிலுக்கு இந்த எதிர்ப்புகள் உருவாகாது. இதன்படி மேற்குலகுக்கு அநுரவை ஜனாதிபதியாக்கி அதனை செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், ரணில் விக்கிரமசிங்கவை சட்டப்படி ஜனாதிபதியாக்க முடியும் என்ற நம்பிக்கையும்மிகவும் குறைவாகவே இருக்கிறது” என்றும் தெரிவித்தார்.

“இதற்காக ரணிலைக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்கச் செய்தும், ஜே.வி.பியையும் 50 வீத வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு கொண்டு வந்தும் 2ஆ வது விருப்பு வாக்குகளை எண்ணும் நிலைக்கு தள்ள திட்டமிடப்படுகிறது” என்று தெரிவித்த விமல் வீரவன்ச, “2ஆவது விருப்பு வாக்குகளை எண்ணும் போது எடுக்கும் காலம் தொடர்பில் தெரியாது. நாட்டுக்கும் 2ஆம் தெரிவு வாக்குகளை எண்ணுவதில் அனுபவம் இல்லை என்பதனால் அதற்கு சிறிது காலம் எடுக்கலாம். இந்தக் காலத்தில் பங்களாதேஷில் நடந்ததை போன்ற நிலைமையை ஏற்படுத்தலாம்” என்றும் எச்சரித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அம்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# சஜித் வெற்றியை உறுதிப்படுத்த மக்கள் காங்கிரஸ் ஆலோசனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்களை ஆராயும் நோக்கில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட பிரதேசங்களின் வட்டார அமைப்பாரகளின் ஒன்றுகூடல் அக்கட்சியின் பிரமுகர் எஸ் எம் சபீஸ் அவர்களின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று எம்.எஸ். லங்கா வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய கொள்கை பரப்பு செயலாளரும், மாவட்ட குழு தலைவருமான முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.ஏ. அப்துல் ரஸாக் (ஜவாத் )தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகம் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.ஐ. மாஹிர் உட்பட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாகிகள், அம்பாறை மாவட்ட வட்டாரங்களின் அமைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி தேர்தல் காரியாலயங்களை திறப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள், வட்டார ரீதியான பிரச்சாரக் கூட்டங்கள், வட்டார ரீதியாக வீடு வீடாக சென்று பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீர்மானங்கள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.







## அல் – அஷ்ரக் வித்தியாலய வரலாற்றில் ஒரு மைல்கல்



(நூருல் ஹூதா உமர)

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முதன் முதலாக நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட முஸ்லிம் சமய கலாசார போட்டியில் கல்முனை கல்வி வலய, நிந்தவூர் கல்வி கோட்டத்தின் கமு/கமு அல்–அஷ்ரக் மத்திய மஹா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) மாணவர் உமர் அலி அப்துல் நாபி அலி முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி அதான் ஒலித்தல் போட்டியில் முதலிடம் பெற்று சாதித்துள்ளார்.

கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் வெற்றி வாகை சூடிய இம்மாணவனுக்கும், பொறுப்பாசிரியர்களுக்கும் மற்றும் அழைத்துச் சென்று வழிநடாத்திய தாய் தந்தையருக்கும் அல்–அஷ்ரக் சமூகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூர் தெரிவித்துள்ளார்.




# தேசிய மட்டத்தில் பைத் போட்டியில் சம்மாந்துறை வலயம் முதலாமிடம்

தேசிய மட்ட முஸ்லிம் கலாசார போட்டியில் மர்ஹபா பைத் நிகழ்ச்சியில் சம்மாந்துறை வலய இறக்காமம் அல் அஷ்ரப் மத்திய கல்லூரி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது .

இச் சாதனையை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் பாராட்டியுள்ளார்.

இப்பாரிய வெற்றியை பெற்ற மாணவர்களை வாழ்த்துவதுடன் இப்போட்டியை இறுதிவரை வழிநடாத்திய உதவி அதிபர் ஏஎம்எஸ்..இர்பானாக்கும் பாடசாலையின் அதிபருக்கும் ஏனைய வழிப்படுத்திய ஆசிரியருக்கும் வலயம் சார்பாக இஸ்லாம்பாட வளவாளர்மௌலவி ஏஜேஎம்.அஷ்ரப்( பலாஹி) நன்றிகள் தெரிவித்தார்.

# மாகாண மட்ட போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் ஏ.ஆர்.எம்.றிஹாப் 14 வயது ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்து கல்லூரிக்கு பெருமையை தேடித்தந்ததோடு தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளார்.






# சரஸ்வதியில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு

பெரிய நீலாவணையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இவ் விழாவை நடாத்தியது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி வை.இராமநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலையக்கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர் .

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களை சமயப்பற்றாளர் திரு மகேந்திரன் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்திற்கு வழங்கி வைத்தார். இதனை பாடசாலைகளுக்கு மன்ற உறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கி வருகின்றனர். ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.

இது பன்னிரண்டாவது பாடசாலை நிகழ்ச்சி திட்டமாகும்.



# விபுலானந்த அழகியல் நிறுவகத்தின் புகைப்படக் கண்காட்சி





(வி.ரி.சகா)

கிழக்கு பல்கலைக்கழக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் 16 வது புகைப்படக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக வளாகத்தில் இடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி டீயுவுவுஐஆநுனுஐயு இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமாரினால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களே இங்கு காட்சிப் படுத்தப்பட்டன.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் போராசிரியர் பாரதி கெனடி புளோரன்ஸ் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

BATTIMEDIA அனுசரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள குறித்த புகைப்படக் கண்காட்சியில் விசேட அதிதியாக மட்டக்களப்பு - கல்லடி 243 வது இராணுவ படைப்பிரிவின் பிறிக்கேட் கொமாண்டர் சந்திம குமார சிங்க கலந்து சிறப்பித்ததுடன், புகைப்படக் கண்காட்சியினை ஆரம்பித்து வைத்துள்ளார். கடந்த 06 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப்புகைப்பட கண்காட்சியானது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது. மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் அனைத்தும் BATTIMEDIA இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமார் அவர்களினால் புகைப்படமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சமுத்திரத்தில் பாலையடி வாலவிக்னேஸ்வரரின் தீர்த்தோற்சவம்





வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மகோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ சிவ பிரபாகரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெற்று சமுத்திரத்தில் சிறப்பாக தீர்த்தோற்சவம் இடம் பெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2024இல் வெளியிடப்பெற்றது.